கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 06.06.2024

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உலக சுற்றுச்சூழல் தினம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உலக சுற்றுச்சூழல் தினம் - 2024, சுற்றுச்சூழல் அறிவியல் துறையில் ஜீன் 5 ஆம் தேதி கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டில் நிலமீட்பு, பாலைவனமாக்கல் மற்றும் வறட்சியைத் தாங்கும் தன்மை பற்றிய பல்வேறு நிகழ்வுகள் மற்றும் போட்டிகள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் இரா.தமிழ்வேந்தன், மனித சங்கிலி நிகழ்வை கொடியசைத்து துவக்கி வைத்தார். அதைத் தொடர்ந்து, நிலமறு சீரமைப்பு மற்றும் வறட்சியைத் தாங்கும் திறன் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. நெகிழி மாசுபாடு மற்றும் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பொதுமக்களுக்கு மஞ்சப்பை வழங்கப்பட்டது. நீர் நிலைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் சமூக சேவகர்களான, கௌசிகா நீர்கரங்கள் ஒருங்கிணைப்பாளர் திரு.சதாசிவம் சிவசாமி மற்றும் நொய்யலாறு அறக்கட்டளை அறங்காவலர் திரு.அஜித்சைத்தன்யா ஆகியோர் அவர்களது அனுபவத்தையும் நீர்நிலைகளின் மறுசீரமைப்பிற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் பகிர்ந்துக் கொண்டனர். சுற்றச்சூழல் அறிவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர்.பெ.தேவகி, அவர்கள் வரவேற்புரை மற்றும் உலக சுற்றுச்சூழல் தின கொண்டாட்டங்களின் வரலாற்றையும் எடுத்துரைத்தார். இயற்கைவள மேலாண்மை இயக்கக இயக்குனர் முனைவர்.ப.பாலசுப்பிரமணியம், அவர்கள் இந்நிகழ்வை பாராட்டும் வகையில் விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்தும் மண்வளத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர்.இரா.தமிழ்வேந்தன், அவர்கள் தலைமை உரையின் போது, நிலத்தையும், சமூகத்தையும் சீர்குலைக்கும் சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சனைகளை சுட்டிக்காட்டி, அவற்றின் மேம்பாட்டிற்கான தீர்வுகளையும் வழிமுறைகளையும் எடுத்துரைத்தார். இந்த ஆண்டு சுற்றச்சூழல் தின கருப்பொருள் சார்ந்த பல்வேறு போட்டிகள் மாணவர்களுக்கு நடத்தப்பட்டு அவற்றின் வெற்றியாளர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வின் முடிவாக பேராசிரியர் முனைவர்.மு.மகேஸ்வரி அவர்கள் நன்றி கூறினார். ஐடிசி நிறுவனம் மற்றும் மலபார் கோல்ட் டைமண்டு நிறுவனமும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**